Tamilmanam International Research Journal of Tamil Studies
Volume 1, Issue 1, October 2024

ISSN: 3049-0723 Online

# சிவவாக்கியர் பாடல்களில் இறைஇன்ப வழிகள்

முனைவர் பா.அருள்ஜோதி

*தமிழ் உதவிப்பேராசிரியர் நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி பொள்ளாச்சி* ***அலைபேசி எண்: 9344885715***

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதன் இப்பூமியில் வாழும் போது தனது பிறப்புக்கும், இறப்புக்கும் இடைப்பட்ட நிலையினை உணர்வதற்கு முன் வருகிறான். அவ்வாறு அவன் உணரும் போது இவ்வுலகில் நிலையாமையை பற்றி முதலில் அறிந்து கொள்கிறான். பின்பு இவ்வுலகில் நிலையான, நிலைத்த பேரின்பத்தை அடைய வழி தேடுகிறான். அதன் விளைவாக சரியை, கிரியை, யோக, ஞான மார்க்கத்தினை கண்டுப்பிடிக்கின்றான். இந்தப் படிநிலைகளை சித்தர்கள் முதல் அடியவர்கள் வரை எவ்வாறு உணர்ந்தார்கள் என்பதையும், சிவவாக்கியார் எவ்வாறு இறை இன்ப வழிகளை தனது பாடல்களின் வழி விளக்கியுள்ளார் என்பதையும் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

அறிவு, ஆற்றல், ஞானம், பகுத்தறிவு, சாத்திரங்கள், வேதங்கள், மந்திரங்கள், சிந்தனை, ஆன்மா, ரூபங்கள், வாயு

**முன்னுரை**

இறைவனை நாடுதல் என்பது இறைவனை அடைதல் என்னும் பொருண்மைகளில் சித்தர்கள் முதல் அடியவர்கள் வரை பல்வேறு பரிணாமங்களைக் கொண்டிலங்கியுள்ளனர். அன்பினால் பிணிக்கப்பட்ட இவ்வுயிரானது அதிலிருந்து விடுபட பல்வேறு பண்புகளைக் கைக்கொள்ள வேண்டும். இவ்வுலகத்தின்று பற்றற என்பதாகும். மனிதனின் மனம் பற்றற்ற நிலையில் பண்படுகிறது. பண்பட்ட மனமே பக்குவமடைந்து இறைஇன்பத்தை அடைகிறது. இவ்வாறாக, சரீரத்தையும், இறைவனையும் ஒன்றிணைத்த ஆன்றோர்கள் சித்தர்களாவர். இதனையே சிந்தை அடங்கிச் சும்மா இருக்கும் நிலை அடைந்தவர்கள் சித்தர்கள் என்று கூறுவது பொருத்தமாகத் தோன்றுகின்றது. ஆதாரங்களுக்கு அப்பால் இருக்கும் வெட்டவெளியில் கலந்து பேரின்பத்தால் விழுங்கப்பட்டு மரணமிலாப் பெருவாழ்வில் மகிழ்வோரே சித்தர்கள். அதுவே சித்தர்நிலை சிவநிலை. ஆன்மப் பயணத்தின் முடிவுநிலை" என்கிறார் க.நாராயணன் அவர்கள் (சித்தர் தத்துவம், ப-47) "சித்தர்கள்

இறைநம்பிக்கை உடையவர்கள் என்றாலும் அந்த எல்லைக்குள் நின்றுகொண்டே சமூக வளர்ச்சிக்குத் தடைக்கல்லாக வழக்கிலிருந்த பல மரபுகளுக்கு எதிராக உரக்கக் குரல் எழுப்பியுள்ளனர்.” என மொழிகிறார் கோ.சதீஸ் அவர்கள்.(உங்கள் நூலகம், கீற்று மின்னிதழ்) “மூலம் அறியேன் முடியும் முடிவறியேன்” (சித்தர்பாடல்கள், ப-136) “சிவயோகம் என்பதின் பொருள். சிவனுடன் இரண்டறக் கலத்தலாகும். அதாவது யோகம் இணைதல் என்பதாக உள்ளதால், சிவயோகம் சிவனுடன் இணைதல் என்பதாகும்.” (சிவயோகம்,ப-3) சுவாமிபிரபஞ்சநாதன் குறிப்பிடுவது இங்கு நினைவுகூரத்தக்கதாகும்.

“இந்த அறிவை அறிவதற்கான அரிதான உடல் என்பது மனித உடல் மட்டுமே என்பதினால் தான் இந்த உடலைக் கொண்டு நல்லது கெட்டதை பகுத்தறிகின்ற பகுத்தறிவு கொண்ட ஆறாம் அறிவு படைத்த மனிதன் என்று அழைக்கப்படுகின்றது. அந்த அரிதான ஆறாம் அறிவை அறிந்துக் கொண்டு, அதனைச் சரியாகக் கையாளத் தெரிந்த பகுத்தறிவாளன் மட்டுமே, அடுத்த பரிமாணமான ஏழாம் அறிவு என்ற எல்லையில்லா அந்த ஏகஇறைவனை எளிதாக உணர்ந்து இந்த உடல் இருக்கும் பொழுதே அதை தன் சொரூப அனுபவமாக மாற்றிக் கொள்ள முடியும் என்கிறது இந்த யோக சூத்திரம் என்று நூல். இதுவே அந்த அறிவை(ஆன்மாவை) அறியக்கூடிய அடுத்த பரிமாணத்திற்கு மனிதனை அழைத்துச் செல்லக்கூடிய அறுதி நிலை என்றும், இதுவே, மனிதன் அடையக்கூடிய கைவல்யம் என்றும் ஸ்ரீ பதஞ்சலி முனிவரின் யோகசூத்திரம் கூறுகிறது.”( யோகசூத்திரம், ப-8)

“மனம் அறிவை (ஆத்மாவை) அறியும் போது அதன் இயல்பான சிந்தனைகள் - எண்ணங்கள் (அறியாமைகள் நீங்கிப் போகின்றன.”( ப-15 ஸ்ரீ பதஞ்சலி முனிவரின் யோகசூத்திரம்(விபூதி பாதம்) சுவாமிபிரபஞ்சநாதன்2021 உடம்பின் பகுதியான மூச்சுப் பையின் இயல்புகளையும், காற்று உடம்புக்குள் மீள்வதுமான சுவாச நிலைகள் பற்றியும் பல்வேறு இரகசியங்களைச் சித்தர் இலக்கியமானது சுட்டிக்காட்டுகின்றது.( https://thamizhsudar.com/sithar-ilakkiyam-katturai-in-tamil/) என்பதிலிருந்து சித்தர்கள் இயற்றிய இலக்கியங்கள் மிகவும் சிறப்பிற்குரியன என்பது தெளிவாகிறது. இத்தகைய சித்தர் இலக்கியத்தில் சிவவாக்கியரின் பாடல்களை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## சரியை

இறை இன்பத்திற்கு வழிகளாகச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு வழிகளைச் சைவ இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இதில் சரியை என்றால் ஒழுங்கு என்பது பொருள். “சரியை என்பது உடம்பு கொண்டு செய்கிற இறைவனுக்குரிய மெய்த்தொண்டு. இதுவே தாசமார்க்கம்.( சித்தர் இலக்கியம், ப-

70) என மீ.ப.சோமசுந்தரம் குறிப்பிடுகிறார்.

"இறைவனை ஆண்டானாகவும், தன்னை அடிமையாகவும் பாவித்து இறைவனுக்குப் பணி செய்வதால் இம்மார்க்கத்தை தாசமார்க்கம் என்பர். "ஆண்டான் - அடிமை உறவிலிருந்து செய்யப்படுதலின் இதனை தாசமார்க்கம் என்பர்" (சைவசமயம் ஓர் அறிமுகம், ப-47) என ப.அருணசலம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். மேலும், இறைவழிபாட்டுக்குத் தேவையான சில சடங்குகளையும், செயல்களையும் செய்வதன் மூலம் ஆன்ம இன்பம் காண முயலுகின்றவர்கள் சரியையாளர்கள்."(பக்-101,102)என்ற க.நாராயணன் அவர்களின் கூற்று குறிப்பிடத்தக்கதாகும். துளுவ நாட்டை ஆட்சிசெய்து வந்த பத்திரகிரிராஜன் என்னும் மன்னன். பட்டினத்தாரைக் கழுவேற்ற முயன்றபோது தோற்று. அவருக்கு அடிமையாகி, அரச போகங்களைத் துறந்து இவரையே குருவாக ஏற்று தொண்டுகள் செய்து முக்தி அடைந்தவர். இத்தகைய இறைஇன்பமுறை சரியை முறை எனலாம்.

"ஓடியோடி யோடியோடி யுட்கலந்த சோதியை

நாடிநாடி நாடிநாடி நாட்களும் கழிந்து போய்

வாடிவாடி வாடிவாடி மாண்டுபோன மாந்தர்கள்

கோடிகோடி கோடிகோடி யெண்ணிறந்த கோடியே" 2

ஒவ்வொரு ஆன்மாக்களிலும் சோதி சொரூபனாய்க் கலந்திருக்கிற சுவாமியைத் தம்முள் கலந்திருக்கின்றரென்று உணர்ந்து அவனை அறியும் வழியை ஆராய்ந்து பாராமல்காடு, மலை, நாடு முதலிய இடங்களுக்கு அவனைத் தேடிக் கொண்டு பொய் வீணே இறந்தவர்கள் அநேக மனிதர்கள். இனி உலக மக்களேநீங்கள் அங்ஙனம் திரியாமல் உங்களுக்குள்ளே நாடிப்பாருங்கள் என்கிறார். உடம்புக்குள் கலந்து நிற்கிற சோதியாகிய பரஞ்சுடரைத் தேடித்தேடி வீணானவர்கள் பலர்.

## கிரியை

இறைவழிபாட்டில் நிகழ்கின்ற செயல்கள் கிரியை எனப்படும். உள்ளம் ஒன்றை நினைக்க உடலுறுப்பு வேறு ஒன்றைச் செய் நிகழ்த்துவது கிரியையாகாது. அகமும் புறமும் கலந்து செய்யப்படும் செயல்களே கிரியையாகும். "கிரியை என்பது செயல். இங்கே வரையறை செய்யப்பெற்ற முறையான செயல்கள் செய்து வழிபாடு ஆற்றுவதைக் குறிக்கும் (சித்தர் இலக்கியம், ப-70) "இறைவன் திருஉருவின் அருகில் சென்று அன்பால் உருகுவதும், கமலத் திருவடிகளைக் கைகொண்டு தொட்டு வணங்குவதும், புகழ்ந்து பாடுவதும், மணங்கமழ் சந்தனம் பூசி மலர்மாலைச்சூட்டிப் பணிவதும் கிரியைகளை முதன்மையாகக் கொண்ட சற்புத்திர மார்க்கம் எனத் திருமந்திரம்

குறிப்பிடுவதாக க.நாராயணன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.”( ப.103) தந்தை – மகன் உறவில் நின்று செய்யும் திருத்தொண்டு என்பதால் இதனைச் சற்புத்திரமார்க்கம் என்பர்” ( சைவ சமயம் ஓர் அறிமுகம், ப-38)

“பூசைபூசை யென்றுநீர் பூசைசெய்யும் பேதைகான்

பூசையுன்ன தன்னிலே பூசைகொண்ட தெவ்விடம்

ஆதிபூசை கொண்டதோ வனாதிபூசை கொண்டதோ

ஏதுபூசை கொண்டதோ யின்னதென் றியம்புமே” ( 33)

இதுவே பூசை இதுவே பூசை என்று நல்ல மனத்தோடு பூசை செய்கின்ற அறிவீனர்களே. நீர் செய்யும் பூசை உங்களுடைய மனத்தின் கண்ணேயிருக்குமேயொழிய, அப்பூசையின் பயன் அசன்றிப்பிது எவ்விடத்திலோ அன்றி நீர் செய்த பூசையை ஆதிபொருள் கொண்டதோ அநாதிபொருள் கொண்டதோ, வேறு எந்தப்பொருள் கொண்டதோ தெரியவில்லை. ஆகையால், நீங்கள் செய்த பூசையைக் கொண்டபொருள் எதுவோ அந்தப்பொருளைத் தெரிவிக்கவேண்டுமென இறைவனை பூசித்து வழிபடும் நிகழ்வினை சிவவாக்கியார் தெரிவிக்கிறார்.

**யோகம்**

இறைவன் நம்முள் இருக்கின்றான். நம் ஆன்மாவில் உறைகின்றான். “பூவினில் நறுமணம் பொருந்தி இருப்பது போல நம் சீவனில் சிவமணம் பூத்திருக்கிறது.” (1459) எனத் திருமந்திரம் கூறுகிறது. “யோகம் என்றால் சேர்க்கை அல்லது பிணைப்பு. இங்கே பரம்பொருளோடு பிராணனைக் குண்டலினி என்னும் ஆற்றலோடு எழுப்பி ஒளி நிலையிலே ஒன்ற வைப்பது யோகம் எனப்படும். ( ப-71, சித்தர் இலக்கியம்)

“ஐம்பொறிகளையும் உள்முகமாகத் திருப்பித் தன்னுள்ளே இறைவனைக் கண்டு மகிழும் யோக மார்க்கத்தைச் சுந்தரர் மேற்கொண்டார் எனத் தெரிகிறது.”( 104) “தோழமை உறவில் நின்று இறைவற்குத் தொண்டு செய்தல் என்பதால் இதனைச் சகமார்க்கம் என்பர்” ( சைவ சமயம் ஓர் அறிமுகம், ப- 38)

உருத்தரித்த நாடியி லொடுங்குகின்ற வாயுவைக்

கருத்தின லிருத்தியே கபாலமேற்ற வல்லிரேல்

விருத்தரும் பாலராவர் மேனியுஞ் சிவந்திடும்

அருட்டரித்த நாதர்பாத மம்மைபாத முண்மையே” ( 3)

இப்பாடலில் சிவவாக்கியர் குண்டலினி யோகத்தை விளக்குகிறார். பிராணாயாமம் மற்றும் மனக்குவிப்பின் மூலம் குண்டலினி சக்தியை சுழுமுனை நாடியில் ஏற்றும் சாதகர் அதைச் சகஸ்ராரம் வரை ஏற்றுகிறார். அப்போது லாடத்திலிருந்து அமிர்தம் ஊறி கீழே இறங்குகிறது. அதைப் பருகும் சாதகர் இளமையான உடலைப் பெறுகிறார். இவ்வாறு பிராணாயாமத்தைச் செய்யும் போது அந்தச் சாதகரின் உடல் சிவப்பு நிறத்தை அடைகிறது. இது உ ண்மை என்றுசிவவாக்கியர் அம்மையப்பர் பாதத்தின் மீது ஆணையிடுகிறார். மேலும், நாடிகள் அல்லது சக்திகள் ஸ்தூல உடலில் இல்லை. சூட்சும உடலில் உள்ளன. ஆனால் அவற்றில் கவனத்தைக் குவிக்க ஏதுவாக அவற்றை ஸ்தூல சரீரத்தில் குறிக்கப்படுகின்றன என்கிறார். வயோதிகராயிருப்பினும், பாலியராவார்களாகயிருப்பினும் அவர்களுக்குண்டாயிருக்கும் நரை, திரை நீங்கித் தேகம் செம்மை நிறத்தையடையும். இது திருவருளையே தமக்கொரு பட்டமாகத் தரித்துக்கொண்டிருக்கின்ற சிவன், சத்தி இவர்களுடைய திருவடிகளில் சத்தியயாக மெய்யோயாகும் பொய்யல்ல. இது வாயுசாதகத்தை வெளிப்படுத்தலின் யோகநிலை எண்ணப்பட்டது.

நெருப்பை மூட்டி நெய்யைவிட்டு நித்தநித்த நிரிலே

விருப்பமோடு நீர்குளிக்கும் வேதவாக்யங் கேளுமின்

நெருப்புநீரு மும்முளே நினைந்துகூற வல்லீரேல்

சுருக்கமற்ற சோதியை தொடர்ந்துகூட லாகுமே” (27)

சாஸ்திரங்களில் சொல்லியபடியே யாககுண்டம் வைத்து அதற்கு உச்சரிக்கவேண்டிய மந்திரத்தை உச்சரித்துத் தீமூட்டி நெய்யைவிட்டுச் செய்து முடிக்கும் யாகத்தின் பொருட்டு நல்ல அறிவோடு மிக்க ஆவல்கொண்டு தினந்தோறும் நீரில் ஸ்நானம் செய்கின்ற வேதவசனத்தையுடைய பிராமணர்களே! நீங்களே நான் சொல்வதைக் கேட்பீராக. அது என்னவென்றால் அந்த நெருப்பையும், நீரையும் உங்களுக்குள்ளாகவே கண்டறிந்து அவைகளின் மயனாயிருக்கின்ற சிவபெருமானைத் துதி செய்வீர்களானால் சுருங்குதலில்லாத சோதியைச் சேர்த்து அத்துடன் ஏகமாய்க் கவர்ந்து வாழக்கூடும்.

கோயிலா வதேதடா குளங்களாவ தேதடா

கோயிலுங் குளங்களும் கும்பிடுங் குலாமரே

கோயிலு மனத்துளே குளங்களு மனத்துளே

ஆவது மழிவது மில்லையில்லை யில்லையே” ( 31)

உலகத்தின் கண் நிருமித்திருக்கும் கோவில்களேயும் குளங்களையும் நமஸ்கரிக்கின்ற அறிவீனர்களே. அங்ஙனம் உலகத்தின்கண் கட்டிவைத்திருக்கும் கோயில்களாலும், குளங்களாலும் பிரயோசனம் என்ன இருக்கின்றது. ஒன்றுமில்லை ஆகையால் கோயிலென்பதும், குளமென்பதும் உங்களுடைய மனத்தின்கண்ணேயாம் இங்ஙனமிருத்தலால் அகத்திற்கு அந்நியமாக இவ்வுலகத்தின்கண் சிருஷ்டியென்பதும் சம்ஹாரமென்பதும் வேறே உண்டாகவேண்டிய அவசியமில்லை என்கிறார்.

செங்கலுங் கருங்கலுஞ் செவந்தசாதி லிங்கமும்

செம்பிலுந் தராவிலுஞ் சிவனிருப்ப னென்கிறீர்

உம்பத மறிந்துநீ ரும்மைநீ ரறிந்தபின்

அம்பல நிறைந்தநாத ராடல்பாட லாகுமே."( 32)

உலகமக்களே நீங்கள் செங்கல்லிலும், கருங்கல்லிலும், சாதிலிங்கத்திலும், செம்பிலும், தராவிலுஞ் செய்து வைத்திருக்கின்ற சில ரூபங்களில் சர்வவியாபகனான சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்றரென்று சொல்லுகின்றீர். அங்ஙனம் நீர் சொல்வது உண்மையென்றும், பொய்யென்றும் உங்களுடைய நிலை இப்படிப்பட்டதென்று நீங்கள் இப்படிப்பட்டவர்கள் என்றும் தெரிந்தபின்பு சிற்றம்பலத்தில் சர்வ வியாபியாய் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானுடைய திருவிளையாட்டும், அவருடைய திருவருளைப்பெறுநிமித்தம் அடியார்கள் பாடுகின்ற பாடல்களும் முன்சொன்ன செங்கல் முதலியவற்றில் இருப்பதும் இராததும் வெளிப்படும் என்கிற முகத்தானே நிலையைச் சாதித்தவர்றாயிற்று என யோகநிலை விளக்குகிறார் சிவவாக்கியார்.

**ஞானநிலை**

இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் இடைப்பட்ட அறியாமை என்னும் இருள்நீக்கி இன்புறல் ஞானநிலையாகும். இரண்டும் ஒன்றே எனத்துணிந்து நிற்றல் கலத்தலாகும். "ஆன்மாவைப் பற்றிய மலங்கள் அழிந்திடப் பக்குவப்பட்ட ஆன்மா தானும் இறைவனும் ஒன்றெனும் ஞான அனுபவத்தில் இறவா இன்பம் துய்க்கும் எனச் சன்மார்க்க நிலையைத் திருமந்திரம் கூறுகிறது." (திருமந்திரம் :1481) "உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம். வுள்ளற் பிரானார்க்கு வாய்க் கோபுர வாசல்" (சைவ சமயம் ஓர் அறிமுகம், ப-43) என டாக்டர் ப.அருணசலம் அவர்கள் ஞானநிலை விளக்குகிறார்.

நாயகி – நாயகன் உறவில் நின்று இறைவனுக்குத் தொண்டு செய்தல் என்பர்" இதனைச் சன்மார்க்கம் என்பர். சரியை, கிரியை, யோகங்களால்

பெறுவது ஞானம். ஞானத்தால் அடைவது சிவப்பேறு" (சைவ சமயம் ஓர் அறிமுகம், ப-40) என்று ப.அருணசலம் குறிப்பிடுகிறார்.

"ஞானம் என்பது அறிவு. தமக்கு இயற்கையாக உள்ள அறிவைப் பசு ஞானம் என்றும், கல்வியின் வாயிலாகப் பெறுகிற ஏட்டறிவைப் பாசஞானம் என்றும் அழைப்பார்கள். குரு தேவனால் உணர்த்தப் பெற்று உதித்தெழுந்து வளர்கிற மெய்ஞ்ஞானம் என்றும் பரஞானமாம்" (சித்தர் இலக்கியம் - முதல்பகுதி, ப-71) என மீ.ப.சோமசுந்தரம் அவர்கள் ஞான நிலையினை எடுத்துரைக்கக்காணலாம்.

என்னிலே யிருந்தவொன்றை யானறிந்த தில்லையே

என்னிலே யிருந்தவொன்றை யானறிந்துகொண்டபின்

என்னிலே யிருந்தவொன்றை யாவர்காண வல்லரோ

என்னிலே யிருந்திருந்து யானுணர்ந்து கொண்டெனே" 5

தனக்குள் இருக்கும் கடவுளை யாரும் உணருவதில்லை. இந்த நிலையில் காண்பவர், காண விரும்பும் பொருள் என்று இருமை உள்ளது. இந்த நிலையைக் கடந்து ஒருவர் தனக்குள் இருக்கும் கடவுளும் தானும் என்று உணரும் போது காண்பவர் காணப்படும் பொருள் வித்தியாசங்கள் மறைந்து போகின்றன. அதனால் காண்பவர் இல்லை என்னெனில் அவரே காணப்படும் பொருளுமாகிறார் என கடவுள் நமக்குள் இருப்பதாக உணர்த்துகிறார்.

நினைப்பதொன்று கண்டிலே னியலாது வேறிலை

நினைப்புமாய் மறப்புமாய் நின்றமாயை மாயையோ

அனைத்துமா யகண்டமா யனாதி முன் னனாதியாய்

எனக்குணீ யுனக்குண னினைக்குமாற தெங்ஙனே" 6

இவ்வுலகில் அனைத்துமாக இருப்பது இறைவனே.அதனால் எதைப் பற்றி நினைத்தாலும் அது இறைவனைப் பற்றிய நினைவாகவே இருக்கிறது. இதை உணராத மக்கள் பொருள்களைப் பற்றி நினைக்கும்போது அவை இறைவனை விட்டு வேறானவை என்பதைப் போல நினைக்கின்றனர். அங்கு இறைவன் இல்லாததைப் போல, அதாவது அவர்கள் இறைவன் அங்கிருப்பதை மறந்து அந்த பொருள்களைப் பற்றி நினைக்கிறார்கள் என்கிறார்.

சாத்திரங்க ளோதுகின்ற சட்டநாத பட்டரே

வேர்த்திரைப்பு வந்தபோது வேதம்வந் துதவுமோ

மாத்திரைத்போ தும்முளே மறித்துதொக்க வல்லிரேல்

சாத்திரப்பை நோய்களேது சத்திமுத்தி சித்தியே 9

வேர்ப்பும் இளைப்பும் வரும்போது, அதாவது மரணம் வரும்போது அவர்கள் ஓதிய வேதம் அவர்களைக் காக்குமா? ஆவர்கள் ஒரு மாத்திரைப் பொழுதாவது தாம் ஓதுவதன் பொருள் என்ன? என மனத்துள் எண்ணியிருந்தால் அந்த எண்ணம்தானே காக்கும் என்று அவர்களிடம் கேட்கிறார். வேர்ப்பும், இளைப்பும் வரும்போது அதை விலக்குவதற்கான மாத்திரை இறைவனைப் பற்றிய எண்ணமே என்று உரைக்கிறார்.இங்கு மாத்திரை என்ற சொல் கால அளவையும் மருந்து என்ற பொருளையும் தருகிறது.

"சித்தமேது சிந்தையேது சீவனேது சித்தரே

சத்தியேது சம்புவேது சாதிபேத மற்றது

முத்தியேது மூலமேது மூலமந்தி ரங்களேது

வித்திலாத வித்திலே யின்னதென் றியம்புமே" (41)

சித்தரென்றும் அவதாரமென்றும் சொல்லித் திரியும் ஞானிகளே! சித்தம் என்று சொல்லுமிடம் ஏது? சிந்தனை எங்கு தோன்றுகிறது? சீவனாகிய உயிர் எங்குள்ளது? சத்தியாகிய வாலை இருப்பிடம் எது? சம்பு எனப்படும் ஈசன் உலாவும் இடம் எது? சாதி பேதம் இல்லாதது எது? முத்தியை அழிப்பது எது? உடம்புயிருக்கு மூலம் எது? மூல மந்திரமான ஒரேழுத்து எது என்பதையெல்லாம் அறிவீர்களா? வித்தே இல்லாமல் வித்தாக என்றும் நித்தியமாய் விளங்கும் உளதாய், இலதாய் உள்ள பொருளை இதுதான் அது என்று விளக்கமாக இயம்புங்கள். ( சிவவாக்கியர் )

"இருக்குநாலு வேதமு மெழுத்தையற வோதிலும்

பெருக்கநீறு பூசிலும் பிதற்றலும் பிரானிரான்

உருக்கிநெஞ்சை யுட்கலந்த உண்மைகூற வல்லிரேல்

சுருக்கமற்ற சோதியைத் தொடர்ந்துகூட லாகுமே" ( 33)

நான்கு வேதங்களையும், பிழையில்லாமல் ஓதினாலும், திரு நீறு பூசினாலும், கடவுளைப் பாடுவாதாலும் அவனை அடைய முடியாது. நீங்கள் உங்களுடைய மனத்தை நெருப்பிலிட்ட மெழுகுபோல இளகச் செய்து, உங்களுக்குள்ளே கலந்து இருக்கும் உண்மையை தெரிந்து கொள்ள முடியுமானால் சோதி சொரூபனாய் விளங்கும் கடவுள் சிவனை அடையலாம் என சிவவாக்கியார் இறைவனை அடையும் வழிமுறையினை எங்கும் வியாபிக்கின்ற பொருளிடத்தில் கலந்து அத்துவித நிலையின் உண்மையினை அடையக் கூடும் என சிவவாக்கியார்

தெரிவிக்கிறார். “வீரசைவஞானம் விசிட்டார்த்துவைதம் எனப்படும். இக்கொள்கையின் படி உயிரும் கடவுளும் ஒன்றை விட்டு ஒன்று பிரிக்கமுடியாத பொருள்கள். பிரிக்க முடியாது இணைத்துக் கொண்டிருக்கும் ஆற்றல் சக்தி எனப்படும். உயிர் கடவுளுமன்று கடவுளில் வேறு மன்று” (இந்தியச் சமயங்களும் தத்துவங்களும், ப- 54) என்கிறார் துரை.சீனிச்சாமி அவர்கள்.

“குண்டம் என்றால் சேமிக்கப் பெறும் பொருளினைத் தாங்கி எளிதில் அது வெளியேறாதபடி பாதுகாக்கும் இடம். குண்டத்தில் தங்கி லயம் பெறுகிற சக்தி குண்டலினி ஆயிற்று” (உள்ளொளி பெருக்கும் சித்தர்கள், ப-39) சி.எஸ். தேவநாதன் அவர்கள். “மனித சரீரத்தைக் தாங்கி நிற்பது குண்டலினி சக்தி. இது பாம்பு போல் வளைந்து சுருண்டு சரீரத்தினுள் எருவாய்க்கும் ( குதம்) கருவாய்க்கும் ( பிறப்பிறுப்பு) இடையில் உள்ளது. இந்த இடத்திற்கு மூலாதாரம் என்று பெயர்” (மேலது ,ப-3) “குண்டலினி சக்தியை விழிக்கச் செய்தே சித்தர்கள் அட்டமாசித்தியைச் பெற்றனர்.” (மேலது ,ப-39)என்கிறார்.

"கண்ணுக்கு ஒரு அறிவு உண்டு .அது பார்த்துத் தெரிந்து கொள்கின்ற அறிவு. அது காட்சி அறிவு என்று சொல்லப்படும். அதுபோல உடம்பிற்கும் ஒரு அறிவு உண்டு. அது பொருளைத் தொட்டுத் தெரிந்து கொள்கின்ற அறிவு அது உற்றறிவு” ( ப- 93) என மறைமலையடிகளார் குறிப்பிட்டுள்ளபடி இறைவனை உடம்பினாலும் அறிய முடியும் என்பது புலப்படுகிறது. இந்தச் செயலை முதல் மூன்று ஆழ்வார்கள் இறைவனைக் கண்டு கொண்ட விதத்துடன் ஒப்புநோக்கத்தக்கதாகும்.

“திருவடி என்றது முதல்வனது திருவருளேயன்றி வேறன்று. ஆகலான் அவ்வருளை முதற்கண் உணர்ந்து தெளிந்து அருள் வழியிலேயே நிலைத்து நிற்பின் பாசவுணர்வு மறைந்து மெய்யுணர்வு தலைப்படும்” ப- 177, எனப் பேராசிரியர் திரு.வை.முருகேசன் அவர்கள் குறிப்பிடுவது மேற்கண்ட கருத்துக்கு மென் மேலும் வலுச்சேர்க்கிறது. ஞானநிலையினை அடைய நமக்குள்ளே உள்ள இறைநிலையினை உணரவேண்டும் என்பது பெறப்படுகிறது.

**முடிவுரை**

இவ்வுலகத்தில் பிறந்த அனைத்து உயிர்களும் நிலையில்லாதன. அந்த உயிர்களின் இறப்பு என்பது அறிய முடியாதன. எனினும், மனிதன் தன்னைத்தானே உணர்ந்து கொள்ளும் நிலையினை அடைய முடியும். அவ்வாறு மனிதனின் உயிர், உடல் விட்டு நீங்கும் போது அதனை உணர்வதற்குச் சித்தர்கள் தலைப்பட்டனர் என்பதை அறிய முடிகிறது. “சரியை நெறியில் ஒருவன் ஒரு

ஆசாரியனிடம் சமய தீக்கையைப் பெற்று தனது தகுதிக்கேற்ப இறைவனைப் புறத்திருமேனியில் வழிபடுகின்றான்" (சிவபோதம்,ப-103,) பின்னர் அவன் கிரியை நெறியிற் சென்று தக்க ஆசாரியனிடம் விசேட திக்கையைப் பெறுகின்றான்" (சிவபோதம், ப-104)" கிரியையாளம் யோகம், செய்தற்கும் உரியவனாகின்றான். யோகத்தினால் அவன் தனது மனதை உலக விடயங்களில் செல்லாதபடி நிறுத்தி, சிவபெருமானைத் தியானிப் போனாகிய தானும் தோன்றாது தியானப் பொருளாகிய சிவம் ஒன்றே விளங்கப் பெறுகின்றான்" (சிவபோதம், ப-105) "சரியை, கிரியை, யோக நெறிகள் மூன்றும் நான்காவது நெறியாகிய ஞானத்துக்கு உறுப்புக்களாயுள்ளன. சரியை, கிரியை, யோகங்கள் முறைமையினாலன்றி ஒருவனுக்கு உண்மை ஞானம் வராது" (சிவபோதம், ப-106)) என்பதன் வாயிலாக இறைவனை வெட்ட வெளியில் தேடாமல் சரியை, கிரியை, யோக, ஞான நெறிகளில் தனக்குள்ளே தேட வேண்டும் என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. சித்தர் இலக்கியம் வெளிப்படுத்தும் தமிழ்ச் சமூகம், கோ.சதீஸ், உங்கள்நூலகம், கீற்று மின்னிதழ், - டிசம்பர் 2015

2. சித்தர் இலக்கியம் கட்டுரை, தமிழ்ச்சுடர், 6.12.2023

3.சித்தர் பாடல்கள், பதிப்பாசிரியர், ஐந்தாம் பதிப்பு, டாக்டர் மெய்யப்பன், மணிவாசகர் பதிப்பகம், 31, பாரிமுனை, சிங்கர் தெரு, சென்னை – 600 108.

4. சிவயோகம், சுவாமி பிரபஞ்சநாதன், முதற்பதிப்பு -2020.

5. யோக சூத்திரம், ஸ்ரீபதஞ்சலி முனிவர், 2021.

6.உள்ளொளி பெருக்கும் சித்தர்கள், சி.எஸ். தேவநாதன், மு.பதிப்பு-டிசம்பர் 2007, இரண்டாம் பதிப்பு -2008, ஸ்ரீ இந்துபப்ளிகேஷன்ஸ், சென்னை- 600 017.

7. சிவபோதம், ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர், 14.01.1962.

8. சித்தர் இலக்கியம் முதற்பகுதி, ஆசிரியர் மீ.ப.சோமசுந்தரம் சோமு, அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.

9. சைவ சமயம் ஓர் அறிமுகம், டாக்டர் ப.அருணசலம், 40, அ.வெள்ளாளர் காலணி மேற்கு, இராமவர்மபுரம், நாகர்கோயில், முதற்பதிப்பு ஆகஸ்ட் -1979.

10. பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம், மறைமலையடிகள், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், திருநெல்வேலி, சென்னைமுதற்பதிப்பு -1930, இரண்டாம் பதிப்பு ஜுன்- 1958.

11. மெய்கண்டார் அருளிய சிவஞான போதமும் விளக்கவுரையும், பேராசிரியர் திரு.வை.முருகேசன், முதற்பதிப்பு நவம்பர் -1993, பாரதி அச்சகம், திருவத்திபுரம்.

12. இந்தியச் சமயங்களும் தத்துவங்களும் அறிமுகம், துரை.சீனிச்சாமி, முதற்பதிப்பு – 2017, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

13. சிவவாக்கியர் பாடல் மூலமும் உரையும், வித்வான் சூ .அப்பன் செட்டியர் அவர்கள் பதிப்பித்து வெளியிட்டது. ஆசிரியர் மா.வடிவேலு முதலியார், இரத்தின நாயகர் அண்டு ஸன்ஸ், சென்னை – 1958.

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.